அசல் வழக்கு எண்.77/2016 நாள்: 21.08.2025

பி.சா.2 திருமதி.ராஜலெட்சுமி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் திருமணத்திற்கு பிறகு எங்கு வசித்து வருகிறேன் என்றால் நடுப்படுகை ஊரில்தான் வசித்து வருகிறேன். நான் தற்போது வசித்து வரும் இடம் எனது சகோதரர் சந்திரனுக்கு சொந்தமான இடம் என்றால் எனது அண்ணன் சந்திரபோஸிடம் கிரையம் வாங்கி வீடு கட்டி வசித்து வருகிறோம். எனது அம்மா பெயர் என்ன என்றால் மாரியாயி ஆகும், அவர் இறந்து 50 வருடங்களுக்கு மேல் ஆகும். இறந்த நாள் ஞாபகம் இல்லை. எனது அம்மாவுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் எனது அம்மாவை சேர்த்து 6 பெண்கள் 2 ஆண்கள் ஆவர், அனைவரும் தற்போது உயிருடன் இல்லை.

2) மேற்படி 8 நபர்களின் இறந்த நாள் எதுவும் ஞாபகம் இல்லை. எனக்கு குழந்தைகள் எத்தனை பேர் என்றால் ஒரு பெண் ஆகும், அவர் பெயர் சுஜாதா ஆகும். சுஜாதாவிற்கு திருமணமாகி 3 பெண் மற்றும் 1 ஆண் குழந்தைகள் உள்ளனர். எனது மருமகன் முருகேசன் 15 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். எனது மருமகன் இறக்கும்போது எனது பேரன் கருவில் இருந்தான். அவர் இறந்த பிறகு 40 நாட்கள் கழித்து எனது மகளுக்கு ஆண்குழந்தை பிறந்தது.

3) எனது மருமகன் இறந்தபிறகு எனது மகள், பேரக்குழந்தைகளை இடையாத்து மங்கலத்திலிருந்து நடுப்படுகைக்கு அழைத்து வந்துவிட்டோம் என்றால் சரிதான். எனது மூத்த பேத்தி பெயர் நந்தினி, 2-வது பேத்தி பெயர் நவீனா, 3-வது பேத்தி பெயர் ரமனி, பேரன் பெயர் பாலமுருகன் ஆகும். 3-வது பேத்தி ரமனிக்கு திருவையாறு மலர் திருமண மண்டபத்தில் நான்தான் திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். பெரியோர்கள் ஏற்பாட்டுடன் முறைப்படி திருமணம் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2-வது பேத்தி நவீனாக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. முதல் பேத்தி நந்தினி அவரது விருப்பப்படி அவரே திருமணம் செய்துகொண்டார்.

4) எனது முதல் பேத்தி நந்தினி வீட்டைவிட்டு சென்றுவிட்டார் என்று நடுக்காவேரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். புகார் கொடுத்து 10 நாட்கள் கழித்து எனது பேத்தி இருக்கும் இடம் தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். எனது பேத்தி யாரை திருமணம் செய்து கொண்டார் என்றால் எங்களது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கும் அன்பரசன் என்பவரை விரும்பி திருமணம் செய்துகொண்டார். அந்த திருமணம் எங்கு நடந்தது என்றால் வளப்பக்குடியில் உள்ள கோவிலில் நடந்தது நாங்கள் போகவில்லை ஊரிலுள்ள மற்றவர்கள் சென்றார்கள்.

5) மேற்படி அன்பரசனும் எங்களது சமூகத்தை சேர்ந்தவர் என்றாலும் உறவினர் என்றாலும் சரிதான். எனது சமூகத்தை சேர்ந்த உறவினராக அன்பரசன் இருந்தும் எங்களது விருப்பத்திற்கு மாறாக திருமணம் செய்து கொண்டதால்தான் நாங்கள் திருமணத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். நானும் எனது மகளும் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை. எனது பேத்தி நந்தினிக்கு குழந்தை பிறந்தபிறகு நாங்கள் ராசி ஆகிவிட்டோம் என்றால் சரிதான். எனது மருமகன் முருகேசன் இறப்பதற்கு முன்பே எனது பேரகுழந்தைகளுக்கு காதுகுத்தினோமா என்றால் பேரனை தவிர மூவருக்கும் காதுகுத்தினோம்.

6) மேற்படி காதுகுத்துக்கு எங்களுடைய சின்னம்மா லோகாம்பாள் மகன்கள் தர்மராஜ், சுந்தரேசன், ராஜேந்திரன், ஜெயலெட்சுமி ஆகியோர்கள் குடும்பத்துடன் வந்தார்கள் என்றால் சரிதான். எனது மருமகன் இறந்த துக்கத்திற்கும் மேற்படியார்கள் கலந்துகொண்டார்கள் என்றால் சரிதான். வாதி விஜயகுமாரி அவரது கணவர் தர்மராஜூடன் வந்து கலந்து கொண்டார் என்றால் சரிதான். எனது மருமகன் இறப்பிற்கு வந்தவர்கள் பிரேதம் எடுப்பதற்கு முன்பே ஊருக்கு திரும்பிவிட்டார்கள். எனது கணவர் இறந்தபோது வாதி விஜயகுமாரி கோடி துணி எடுத்து போட்டார் என்றால் சரிதான்.

7) தர்மராஜ் இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் ஆமாம். தர்மராஜ் இறப்பிற்கு நான் வாதி விஜயகுமாரிக்கு கோடிதுணி போட்டேன் என்றால் சரிதான். அதேபோல் மற்ற உறவினர்களும் விஜயகுமாரிக்கு கோடித்துணி போட்டார்கள் என்றால் சரிதான். வாதியின் கணவர் தர்மராஜ் வீடு மாடிவீடு என்றால் சரிதான். மேற்படி மாடிவீடு கட்டி 25 வருடங்கள் இருக்குமா என்றால் ஆமாம். அதன் கிரகபிரவேசத்திற்கு நான் கலந்து கொண்டேனா என்றால் இல்லை, காரணம் என்ன

என்றால் நான் பேசமாட்டேன் அதனால் கலந்துகொள்ளவில்லை. தர்மராஜூடன் பேசாமல்போனதற்கு காரணம் வாதி விஜயகுமாரியை திருமணம் செய்து கொண்டதுதான்.

8) வாதியை திருமணம் செய்துகொண்டதால் சுந்தரேசன், ராஜேந்திரன், ஜெயலெட்சுமி ஆகியோரும் வாதியின் கணவர் தர்மராஜூடன் பேசுவதில்லை. தர்மராஜின் முதல் மனைவி இளஞ்சியம் இறந்தபிறகு தர்மராஜின் தாயார் லோகாம்பாள் தர்மராஜூடன்தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். வாதி விஜயகுமாரி தர்மராஜூடன் வந்தபிறகு தாயார் லோகாம்பாள் வீட்டைவிட்டு சென்றுவிட்டார். நான் குடியிருக்கும் வீட்டிற்கு குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி ஆவணங்கள் விசாரிக்கப்பட்டுதான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

9) தர்மராஜூக்கு ஆறுமுகம் என்ன உறவுமுறை என்றால் மாமா ஆகும். தர்மராஜ் வாதியை தனது வீட்டிற்கு அழைத்து வரும்போது ஆறுமுகம் உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார், ஆறுமுகம் இறந்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிறது. லோகாம்பாள் இறப்பிற்கு பிறது அவரது பிரேதத்தை அவரது மகன் தர்மராஜ் வீட்டில் வைத்துதான் இறுதிச்சடங்கு செய்யப்பட்டு தகனம் செய்ய எடுத்து செல்லப்பட்டது என்றால் சரிதான். லோகாம்பாள் இறப்பிற்கு காரியங்கள் அனைத்தும் தர்மராஜ் வீட்டில்தான் செய்தார்கள் என்றால் சரிதான்.

10) தர்மராஜ் இறந்தபிறகு அவரது காரியங்களும் தர்மராஜ் வீட்டில்தான் நடந்தது என்றால் சரிதான். தர்மராஜ் வீட்டில்தான் வாதி விஜயகுமாரி ஆரம்பம் முதல் தற்போது வரை குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தர்மராஜ் இறந்தபோனதற்கு காரியப்பத்திரிக்கைகள் அடித்தோமா என்றால் இல்லை. ஏன் பத்திரிக்கை அடிக்கவில்லை என்றால் பத்திரிக்கை அடிக்கமுடியவில்லை அதனால் வாய்மொழியாக தகவல் சொன்னோம். தர்மராஜ் இறப்பிற்கு செலவுகளை செய்தது வாதி விஜயகுமாரிதான் என்றால் இல்லை, ராஜேந்திரன் செய்தார். ராஜேந்திரன் செலவு செய்தார் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் ராஜேந்திரன் சொல்லிதான் தெரியுமா என்றால் ஆமாம்.

11) கருமாதிக்கு ஏன் பத்திரிக்கை அடிக்கவில்லை என்று ராஜேந்திரனிடம் கேட்டேனா என்றால் இல்லை. எனது சின்னம்மா லோகாம்பாள் வாதியை தர்மராஜ்

திருமணம் செய்து கொண்டபிறகு ராஜேந்திரனுடன்தான் இருந்தார் சுந்தரேசனுடன் இல்லை என்றால் சரிதான். வாதி விஜயகுமாரி எங்களது முத்துராஜா சமுதாயத்தை சேர்ந்தவர் அல்ல என்றால் சரிதான், அவர் எந்த சமுதாயத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. எனது சின்னம்மா மகன் தர்மராஜ் வேறு சமுதாயத்தை சேர்ந்த வாதியை திருமணம் செய்துகொண்டார் என்பதற்காக நாங்கள் யாரும் தர்மராஜுடன் உறவு கொண்டாடவில்லை என்றால் வாதியை தர்மராஜ் திருமணம் செய்து கொள்ளவில்லை. வேறொரு சமுதாயத்தை சேர்ந்த வாதி விஜயகுமாரியுடன் வசித்து வந்ததால் நாங்கள் யாரும் தர்மராஜுடன் உறவு கொண்டாடவில்லை. வாதி விஜயகுமாரியுடன் தர்மராஜ் அவருக்கு சொந்தமானதும் தற்போது வாதி வசித்து வருவதுமான வீட்டில் 40 வருடங்களாக வசித்து வந்தார்.

12) இந்த வழக்கில் ராஜேந்திரன் என்ன கட்சி செய்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் வாதி தர்மராஜுக்கு சொந்தமான இடத்தை கேட்கிறார் அவர் வாரிசு அல்ல என்று ராஜேந்திரன் கட்சி செய்கிறார். ராஜேந்திரன் என்ன கட்சி செய்கிறாரோ அதே விவரத்தைதான் நான் சாட்சியாக கூறுகிறேன் என்றால் சரிதான். தர்மராஜ் வேற்று சமுதாயத்தை சேர்ந்த வாதியை திருமணம் செய்து கொண்டதால் நாங்கள் அனைவரும் வாதிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் வாதிக்கும் இடையே தனிப்பட்ட விரோதம் எதுவும் உண்டா என்றால் ஆமாம், பேசிக்கொள்வதில்லை.

13) எனது பேத்தி நத்தினிக்கு திருமணமாகி கருவுற்ற பிறகு, உங்கள் பேத்திதானே நந்தினி அவருக்கு செய்யவேண்டியதை செய்யவேண்டியதுதானே என்று வாதி சொன்னதால் வாதிக்கு எதிராக நான் கோபம் கொண்டு அவரிடம் பேசுவதில்லை என்றால் ஆமாம். எனது சின்னம்மா மகன் ராஜேந்திரன் கேட்டு கொண்டதற்காக தர்மராஜ் வாதியை திருமணம் செய்யவில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தர்மராஜ் வாதியை திருமணம் செய்துகொண்டுதான் 40 வருடமாக கணவன் மனைவியாக வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி : இல்லை

Sd/ - Rajalakshmi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.08.21 18:35:13 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU